சங்கப்புலவரும் சங்க இலக்கியப் பண்பும்

A.kalyansaran

MA. Music

50

ஆய்வின் நோக்கம்

சங்கப் புலவர்களின் பெருமைகளையும் அவர்தம் சிறப்புக்களையும், பாணர்கள் அக்கால கமூகத்தின் வீர, மறவர்களாக வாழ்ந்தார்கள் என்பதனை குறிப்பிடுவதாகவும், சங்கப் புலவர்களுக்கு இயற்கையின் பால் இருந்த ஈடுபாட்டினையும் விளக்கும் வகையாக இவ் ஆய்வு அமைந்துள்ளது.

ஆய்வுச் சுருக்கம்

சங்ககால அற ஒழுக்கம், கலை, இலக்கியம், பாணர் பெருமைகள், புலவர்கள் வரலாறு போன்றன பற்றியும், சங்ககால மக்களின் வாழ்வு முறை ஐவகை நிலங்களிலும் இசைக்கலை முறைமை, வாத்திக் கருவிகள் போன்றன பற்றி வரிவாக இவ் ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிவொழுக்கங்களிற் சிறந்த சங்ககால புலவர்களைச் சான்றோர்கள் என்றாலும், அவர் பாடிய சான்றோர் செய்யுளென்றாலும் தமிழ் வழக்கு, ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்ற ஒளப்பாங்குள்ள அப்புலவர்கள் மன்னர்களுக்குரிய பெருமதிப்பை மக்களாற் பெற்றனர். மக்களிடத்திற் பேரன்பும், அரசை அறநெறியிற் செலுத்தும் அருமுயற்சியும் அஞ்சா நெஞ்சத்தோடு எவ்விடத்திலும் உண்மையை எடுத்துக்கூறும் மனத்திண்மையும் உடையவர். வுhழ்த்து மொழியும் பாராட்டும் உரியவர்கன்றிப் பிறர்க்கு வழங்காத் தீரமும் உறுதியுமுடைய பெருந்தகையாளர். இதனாலன்றோ அவர்களின் அன்பை பெறுதல் பெறும்பேறெனக் கொண்டு அக்காலத்து அரசர்களும் வேண்டுவன புரிந்து அவர்களைசி சிறப்பித்தனர். புலவர் பாடும் புகழிலும் பெரிதாக வேறெதனையும் மதியாத அரசர்அப்புலவர்களின் உணர்ச்சியைத் தூண்டக்கூடிய முறையில் வாழ்ந்து அவர்களால் பாமாலை சூட்டப்பெற்றனர். வறுமையிற் கிடந்து வருந்திய போதும், அப்புலவர்கள் புகழுக்குரிய வொருவனையின்றிப் பிறரைப் பாடாது. ஆவன் கொடுப்பது கூழாயினும் அதனை உவந்தேற்று வறுமைபை; போக்கி வாழ்ந்தனர்.

துன்பம் வந்துற்ற போதிலும் துளங்குலறியாத உள்ளம் படைத்த அப்புலவர்கள் பூசனை புரிந்து தம்மைப் போற்றிய மன்னருக்கு உயிரையும் உவந்தளித்தனர். அரசனின் சீற்றத்துக்கு இரையாகி அழிந்து கிடந்த இடங்களைக் கண்டு அவர்கள் இரங்கினர். நாட்டின் நலன் கருதி பகையரசர்களைச் சந்து செய்து, தமிழ் நாட்டிலே ஒற்றுமையை நிலவச் செய்து, தமிழர் தம் பண்பாட்டினை வளர்த்ததோடு பிறர் புகழ் பாடியும் தம் புகழ் நாட்டியச் சங்ககாலப் புலவர்களின் வாழ்க்கை உள்ளுந்;தோறும் உவகையளிக்குநட தன்மையது. தமக்கு நெல்லிக்கனி யீந்த அதிகமான உயிர் நீத்த போது ஒளவையார் நெஞ்சுருகிப் பாடியதும் பாரி அஸஇறந்த பின் உயிர் வாழ விரும்பாது கபிலர் வடக்கிருந்ததும், குமணன் நாடிழந்து காட்டில் வதியுநாளில் பெருந்தலைச் சாத்தனார் சென்றிரப்ப அவன் தன் தலை

கொய்தற்கு வாளைக் கொடுத்ததும், கோப்பெருஞ்சோழன் உயிர் துறக்க அத்துயரைப் பொறுக்க முடியாத பிசிராந்தையார் தம் உயிர் துறந்ததுமாகிய நிகழ்ச்சிகள் பல அக்காலத்துப் புலவர்களுக்கும் அரசருகளுக்கிடையேயிருந்த அன்பின் பெருக்கை எடுத்துக் காட்டுகின்றன. கபிலர், பரணர் முதலிய சங்ககாலப் புலவர்கள் தாரகை நடுவன் தண்மதி போன்று விளங்கித் தமிழ்ப் புலவர்கள் வாழ்க்கைக்குத் தனிப்பெருமை கொடுத்த வரலாறு புறநூனுறு முதலிய தொகை நூல்களிற் காணப்படுகின்றது. அவற்றாலன்றி வேறு எவ்வகையர்லும் அவர்தம் பண்பட்ட வாழ்க்கையைத் தெளிவாக அற்pந்து கொள்ள முடியாது. என்றுமிறவாத இன்பத் தமிழ்ப் பாக்களைச் சங்கப்புலவர்கள் எப்படிப் பானர் என்பதை ஆராய்வோமாயின், அப்புலவர்களின் பெருமையை நாம் ஒருவாறு கண்டு தெளியலாம். ஆழ்ந்த கருத்துக்களை இனிய மொழி நடையில் தெளிவாகப் பாடுதற்கு அவர்கள் கல்வியறிவு மட்டுமன்றி சீறிய ஒழுக்கமுங் காரணமாயிற்று. அறிவொழுக்கங்களால் மேம்பட்டு விளங்கிய அப்புவர்களின் உள்ளம் ஒளியுடையதாக விளங்கிற்று. உள்ளத்தில் ஒளியுண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும் எனினும் உண்மையைக் காட்டுவனவாகச் சங்கச்செய்யுள்கள் யாவும் விளங்குகின்றன. அதனாலன்றோ அவர்கள் சான்றோர் என்று அழைக்கப்பட்டனர். சான்றோர் என்னுஞ் சொல் சால்பு என்னுஞ் சொல்லை அடியாகக் கொண்டுள்ளது.

எல்லா நற்குணங்களும் நிரம்ப பெறுதல் சால்புடைமை எனப்படும். அங்ஙனம் நற்குணங்கள் யாவும் அமையப்பெற்ற சான்றோர் பெருந்தொகையினராக அக்காலத்தில் வாழ்ந்தமையால், சங்ககாலத் தமிழகம் சிறப்புற்று விளங்கிற்றெனலாம். நாட்டின் நலன் கருதி அவர்கள் எவ்வழிகளிற் சென்று உழைத்தனர் என்பதையும், அரசன் முன்னிலையில் அஞ்சாது நின்று அறவழி காட்டி, நாட்டை நல்வழிப்படுத்திய வகையினையும் புறநூனுற்றுச் செய்யுட்கள் தெளிவாகக் காட்டுகின்றன. புகழ்ந்து பாடினும் இகழ்ந்து பாடினும் பாடிய பொருளைப் பயன்தேவிடும் பெற்றி வாய்ந்த உண்மையைக் கவிதைகள் அவர்கள் நாவில் எழுந்தன. அதனால் அவர்கள செந்நாப்புலவர் என்றும் திருந்துமொழிப் புலவர் என்றும் சங்ககாலத்திலேயே பாராட்டப்பட்டனர். ஆகவே இத்தகைய தூய உள்ளமும் அறிவும் படைத்த அருளாளரின் நட்பை அக்காலத்து அரசர்கள் பெரிதும் விரும்பியதோடு, ஆண்களாற் புகழ்ந்து பாடப்படுதலைப் பெரும் பெறெனக் கருதி, அப்புலவர்கள் உள்ளம் உவப்பன செய்து அவர்களைத் **தழுவிக் கொண்டன.**

ஐஞ்ஞாற்றுக் மேற்பட்ட புலவர்கள் சங்க காலத்திலிருநதே செய்யுட் செய்திருக்கின்றவர்கள் என்பது அக்கால நூல்கள் வாயிலாக அறியக் கிடக்கின்றது. குறுகிய அக்காலத்துப் பகுதியுட் பெருந்தொகையினராகப் புலவர்கள் தோன்றியது போல வெறெக்காலப் பகுதியிலும் தமிழ் நாட்டிற் தோன்ற வில்லை. ஒரு காலப்பரப்பில் அவ்வாறு பெருந்தொகையினராய்ப் புலவர்கள் தோன்றுவதற்கான காரணங்களை நோக்குவோம். புலவனுடைய உள்ளமானது குழந்தையினுடைய உள்ளத்தை ஒருவாறு ஒத்திருக்கின்றது. இயற்கை காட்சிகளைக் கண்டு குதூகலங் கொள்ளுதல், சொல்லையும் அது குறிக்கும் பொருள். உணர்ச்சி முதலியவற்றையும் அவதானித்தல், கற்பனையுலகிற்

சஞ்சரித்தல் ஆகியன குழந்தையிடத்திலும், புலவனித்திலும் காணப்படும சிறப்பியல்புகள், குழந்தைப் பருவம் ஒருவனை விட்டு நீங்கவே அப்பருவத்திற்குரிய சில சிறப்பியல்புகளும் அவனை விட்டு பெரும்பாலும் அகன்று விடுகின்றன. அவ்வாறு அது நீங்கினும், கற்பனையுலகிற் சஞ்சரித்தல் முதலிய சிறப்பியல்புகள் அவனை விட்டு நீங்காது வளர்ந்து வருமாயின் அவன் சிறந்த புவவன் ஆவான் என்பதில் சந்தேகமில்லை.குழந்தைப் பருவத்திலுள்ள ஒரு சமுதாயத்திலும் குழந்தைக்குரிய மேற்கூறிய சிறப்பியல்புகள் காணப்படும். அதனால் ஒரு சமுதாயம் குழந்தைப் பருவத்திலிருக்கும் போது அதன் கணுள்ள மக்களுட் பலர் தம் உணர்ச்சியைப் புலப்படுத்தும் பாக்களைப் பாடக்கூடிய ஆற்றலுடையோராயிருத்தலும் சமுதாயம் வளர்ச்சிறத் தொடங்க, அத்தகைய புலமையுடையோர் குறைந்து போதலும் இலக்கிய வரலாற்று நூல்கள் கூறும் உண்மையாம். இதனாலேயே ஒரு மொழியிற் செய்யளிலக்கியம் முதலிற்றோன்ற, அதனைத் தொடர்ந்து உரை நடை இலக்கியம் தோன்றுகிறது. தமிழ் மக்களின் பண்பாட்டு வளர்ச்சியை நோக்கும் போது சங்க காலத்துச் சமுதாயம் கற்பனையுலகிற் சஞ்சரித்தல் முதலிய சிறப்புடைய பண்புகளையுடையதாய் விளங்கினமையால் அச் சமுதாயத்தின் கண் பல சிறந்த புலவர்கள் தோன்றியதில் வியப்பொன்றுமில்லை. அகத்தும் புறத்தும் முரண்பாடில்லாத சங்க கால மக்களின் வாழ்க்கை முறையும் அக்காலப் பாவனத்திற்குச் சாதாகமாயிருந்தது. ஒரு புலவனிடத்திற் காணப்படும் சிறப்பியல்புகளுள், தெளிந்த உள்ளமும் ஒன்று. விருப்பு வெறுப்புக்களாலேற்படும் இன்பதுன்பங்கள் ஒருவன் மனத்தைத் தாங்கிக் கொண்டிருக்குமாயின், எத்துணை நூலறிவிருந்த போதிலும் அவனுள்ளத்தில் உண்மையறிவும் உயர்ந்த கவிதையும் உதிக்கமாட்டா. நிம்மதியில்லா மனத்துக்டகு நிறைவுத் தன்மை எங்கிருந்து வருதல் கூடும்? அத்தகைய உள்ளத்தில் சிறந்த கவிதை உருப்பெறமாட்டாது.

மன அமைதியை தரவல்ல வாழ்க்கை முறையும் உள்ளப்பாங்கும் ஒருவனிடத்தில் அமையாவிடின் அவன் உண்மைப் புலமைக்கு உரியவானாவான். சங்க காலப் புலவர் உள்ளத்தில் தெளிவும் நிறைவுத் தன்மையும் குடிகொண்டிருந்தமைக்கு அவர் தம் செய்யுட்களே சான்றாகும். சங்ககாலச் செய்யுட்களின் சொற்பொருட் போக்கிற்கும் பிற்காலச் செய்யுட்களின் போக்கிற்கும் பல வகையில் வேற்றுமை உண்டு. சங்க காலத்திலிருந்த புலநெறி வழக்கு, பொருள் மரபு முதலியவற்றுட் சில பிற்காலத்தில் வழக்கொழிந்து போயின. அங்ஙனம் பழைய முறைகளின் நடையுடை பாவனைகள் காலத்திற்கு காலம் வேறுபடுவது போலவே செய்யுள் வழக்கு முதலியனவும் வேறுபடுதல் இயல்பாகும்.

ஒரு காலத்திலிருந்த வழக்கு வேறு ஒரு காலத்தில் ஏன் įகிவி;ப்படுகின்றது எனபதையும், நாம் அறிந்தாலன்றி, தமிழிலக்கிய வரலாற்றைச் செவ்வனே அறிந்து கொள்ளல் இயலாது, சங்க காலம் ஏற்குறைய 300 ஆண்டுகளுக்குக் கொண்ட ஒரு காலப்பகுதி என்பதை மேலே குறித்தோம். அக்காலப்பகுதியிலே செய்யுள் மரபு சிறிது சிறிதாக மாற்றமுற்றுச் சென்றிருப்பதை நாம் அக்காலச் செய்யுளிற் காணலாம். அக்காலப்பகுதியில் மக்கள் வாழ்க்கை மிக விரைவாக முன்னேறிற்று என நூல்கள் அறியக்கிடக்கின்றது. வாழ்க்கையில் உண்டான மாற்றங்களுக்கு இணங்கச் செய்யுள் மரபு

மாற்றறமடைந்துள்ளது. அம்மரபில் ஏற்பட்ட மாற்றங்களையெல்லாம் இச்சிறு நூலின் கண் குறித்தல் இயலாது எனினும், அவற்றுட் ஒன்றை மட்டும் ஈண்டுக் குறித்து அப்பாற் செல்வோம். ஐவகை நிலங்களுட் பாலை நிலம் வறண்ட பிரதேசமாதலும், அந்நிலத்தில் வாழ்ந்த மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை அந்நிலத்திலிருந்து பெறமுடியாமையாலும், அந்நிலத்திரல் வாழ்நத மக்கள் குறிஞ்சி முதலிய ஏனைய நிலங்களிற் சென்று வாழ நேர்ந்தது. அங்ஙனம் வாழ்ந்த காலத்தில் ஐவகை நிலங்களுக்கும் உரியவனாக வழக்கிலிருந்த ஐவகை ஒழுக்கங்களும் பாலை ஒழிந்த நால்வகை நிலங்களுக்கும் உரியவனாகக் கொள்ளப்ட்டன. ஆகவே பிரிதல் உடன்போக்கு என்னும் பாலையொழுக்கங்கள் குறிஞ்சி முதலிய ஏனைய நிலங்களுக்கு உரியனவாயின. புhலை நிலத்தில் மக்கள் வாழ்ந்த காலத்திற் பிரிவு பொருள் வாயிற்பிரிவாக இருந்தது அது பிற்காலத்தில் ஓதற் பிரிவு, தூதிற் பிரிவு, பகைவயிற் பிரிவு என மக்கள் வாழ்க்கைக்கு இணங்கப் பல வகைப்படலாயிற்று, இனி சங்க காலத் தொடக்கத்தில் அன்பினைந் திணையாகிய ஐவகைக் காதலொழுக்கங்களே வழக்கிலிருந்தன. அக்கால முடிவிற் கைக்கிளை, பெருந்திணையாகிய இரண்டு ஒடுக்கய்கள் சேர்ந்து அகத்திணை ஒழுக்கங்கள் ஏழாயினமைக்கு மக்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களே காரணமாகும். சங்கச் செய்யுட்களிற் காணப்படும் தனிப்பண்புகள் சிலவுள, இன்ன பொருளை இன்னவாறு அமைத்தல் வேண்டும் என்னும் மரபு பிறழாமல் அக்காலப் புலவர்கள் செய்யுட்களை இயற்றினர்.

மக்களுடைய ஒழுக்கங்களும் மனோபாவங்களுந்தான் செய்யுட்களுக்குப் பொருளாக அமைதல் வேண்டும் என்பத அக்காலப் மரபாகும். காதல், வீரம் முதலிய பண்புகளைச் சங்கப் புலவர்கள் சித்தரித்துக் காட்டும் வகை வியக்கத் தக்கது. அவர்கள் இயற்கையின் பல வகைக் கோலங்களையும் சித்தரித்துக் காட்டுகின்றன. எனினும் இயற்கை வருணணை சங்கச் செய்யுளில் முதலிடம் பெறவில்லை: மக்களுடைய ஒழுக்கந்தான் முதலிடம் பெறவில்லை. மக்களுடைய ஒழுக்கந்தான் முதலிடம் பெற்று விளங்குகின்றது. அதனை கூறுமிடத்து அதற்கிணங்க இயற்கைக் காட்சிகள் சித்தரிக்கப்படுகின்றன. இயற்கையோடு நெருங்கிய தொடர்புடையது அக்கால மக்களின் வாழ்க்கை பூக்களாலும் தழை கொடிகளாலும் தம்மை அலங்கரித்துக் கொள்வதில் அவர் பெருவிருப்புடையர்.

அக்கால அரசருட் சிலர் மயிலுக்குப் போர்வையும் முல்லைக்குத் தேரும் ஈந்த செய்திகள் இயங்கைக காட்சிகளில் அக்கால மக்களுக்கிருந்த ஈடுபாட்டினை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. எனினும் இயற்கையை மட்டுமே சித்தரித்துக் காட்டும் செய்யுட்கள் எழுதற்கு அக்கால மரபு இடம் அளிக்கவில்லை. அகத்திணை ஒழுக்கங்களைக் கூறும் செய்யுட்களில் ஆங்காங்கு இயற்கை காட்சிகளும் நிகழ்ச்சிகளும் சிறப்பாக வருணிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அவற்றின் கண் ஐந்திணை வகையாகிய முதல், கரு, உரிப்பொருட்கள் விசேடமாக அமைந்திருந்திருக்கின்றன. இவற்றுள் உரிப்பொருளே அகத்திணைச் செய்யுட்களுக்கு உயிராக உள்ளது. இதனை அடுத்து மா, மரம், புள் முதலிய கருப் பொருள்கள் சிறந்தனவாகக் கருதப்பட்ன.

கரு, உரியாகிய இருவகைப் பொருள்களோடு நிலம், பொழுது ஆகிய முதற் பொருளும் ஒரு செய்யுளில் அமையுமாயின் அச் செய்யுள் விளக்க முற்றுத் திகழுமெனக் கொள்ளப்பட்டது. அவ்வாறு முதற் பொருளுமட கருப்பொருளும் சிறப்பாக அமைந்துள்ள செய்யுட்களிலே இயற்கை வருணைகளை காணலாம். புறத்திணைச் செய்யுட்களிலும் இயற்கை வருணணைகள் உளவெனினும், அச்செய்யுட்களில் முதலிடம் பெறுவன மக்களுடைய புறவொழுக்கமாகிய போர் முதலியனவே. சங்கப் புலவர்களுக்கு இயற்கையின் கண் இருந்த ஈடுபாட்டினை அவர்கள் புனைந்து கூறிய உவமைகளாலும் பிறவற்றவால் அறிந்து கொள்ளாலாம். வேறுபட்ட இரு பொருள்களுக்கிடையேயுள்ள ஒப்புமையைக் கண்டு அதனை உள்ளந்தோறும் உவகையளிக்கும் வகையில் எடுத்துக்காட்டும் ஆற்றல் உள்ளந்தெளிவும் நுண்ணுணர்வும் உடைய புலவரிடத்தன்றிப் பிறரிடத்திற் காணப்பட மாட்டாது. உவமைகளைக் கையாளும் வகையிலிருந்து ஒரு புலவனுடைய கற்பனாசக்தியையும் பிற ஆற்றல்களையும் ஒருவாறு அறிந்து கொள்ளலாம். சங்கப் புலவர்கள் இயற்கைக் காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் எந்த அளவிற்குக் கூர்ந்து அவதானித்தார்கள் என்பதை அவர்கள் அமைத்த உவமைகள் வாயிலாக நாம் அறியலாம். வேறுபட்ட பொருள்கள் ஒன்றிக்கொன்று உவமையாக வருதலைக் காணும் போது எமக்கு ஒரு வியப்புணர்ச்சி தோன்றகின்றது. அவை புலவனுடைய உள்ளக்கருத்தையும் உணர்ச்சியையும் வெளிப்படுத்தும் வகையினை நோக்கும் போது சங்கப் புலவனுடைய ஆற்றலைக் கண்டு இன்புற முடிகின்றது. சங்கச் செய்யுட்களிற் சாதாரண உவமைகள் மட்டுமன்றி உள்ளுறை உவமங்களும் காணப்படுகின்றன.

சாதாரண உவமைகள் வருமிடத்து உவமையும் பொருளும் வெளிப்பட்டு நிற்றலைக் காணலாம். உள்ளுயையுவமம் வருமிடத்து, உவமை வெளிப்பட்டு நிற்கப் பொருள் தொக்கு வரும். வெளிப்படையாகக் கூய விரும்பாத ஒன்றைப் குறிப்பாகப் புலப்படுத்தற் பொருட்டு உள்ளுறையுவமும் கையாளப்படுகின்றது. தோழி முதலியோர் கூற்றாக செய்யுட்களில் உள்ளுறையுவமம் பெரும்பாலும் வருதலுண்டு தோழி தலைவனுடைய ஒழுகலாற்றினை வெளிப்படையாகக் கடிந்து கூற விரும்பாதவிடத்து, அவனுடைய நாட்டிற் காணப்படும் இயகைக் காட்சிகளைப் புனைந்து கூறும் வாயிலாகத் தன் கருத்தை வெளிப்படுத்தல் உண்டு. இத்தகைய உள்ளுறையுவமங்களும் குறிப்பாகப் பொருளையுணர்த்தும் இறைச்சி முதலியனவும் சங்கப் புலவர்களாற் சிறப்பாகக் கையாளப்பட்டன. சங்கக்கால அகத்திணைச் செய்யுள் வழக்கினைப் புலநெறி வழக்கு என்றும் கூறுதலுண்டு. அது நாடக வழக்கினையும் உலகியல் வழக்கினையும் ஆதாரமாகக் கொண்டு எழுந்தது என்று தொல்காப்பியர் கூறகின்றார். அகத்திணைப் பொருளைக் கூறும் பொழுது அதற்கு வேண்டிய காலம், இடம், சூழல் முதலியவற்றை வகுத்துக் கொண்டு அதனை செய்யுளிற் கூறுதலே வழக்காறாகும். அங்ஙனம் கூறும் பொழுதும் புலவன் தன் கூற்றாக் கூறுதல் மரபன்று. தலைவன், தலைவி, தோழி முதலானோருள் ஒருவர் கேட்பதாக் கூறுதலே மரபாகும். புறத்திணைப் பொருகைக் கூறும் பொழுது, புலவன் தன் கூற்றாகக் கூறுதலுண்டு. இனி ஒரரு பொருளை ஒரு செய்யுளில் அமைத்துக் கூறுதலே சங்க காலத்திற்

பெருவழக்காக இருந்தது. தொடர்ச்சியாக வரும் பல செய்யுட்களில் ஒரு பொருளைக் கூறுதல் பிற்கால வழக்காகும்.

இனி, சங்கச் செய்யுளின் தனி சிறப்பிற்குக் காரணமாக இருந்தவற்றுள் அக்கால மொழி நிலையும் ஒன்றாகும். ஆசிரியம் முதலிய பிறமொழிகளிலுள்ள சொற்களுட் பெரும்பாலான பல எழுத்துக்களாலானவை. அவற்றுள்ளும் சங்ககாலத்தில் வழங்கிய தமிழ்ச் சொற்கள் மூன்று , நான்கு எழுத்துக்களை இகவாதன. சொற்கள் பல ஒன்றோடொன்று தொடர்;ந்து செல்லும் பொழுது உருபு முதலியன விரியாது தொக்கு நிற்பதே சங்ககாலத்திற்; பெருவழக்கமாயிருந்தது. இவ்வாறு சில எழுத்துக்களாலான சொற்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து வரும்பொழுது உருபுகள் விரியாது வரின் சொற்செறிவு ஏற்படுகின்றது. உதாரணமாக

‘ செறுத்த செய்யுட் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபகழ்க் கபிலன்’
‘இமிழ்குரண் முரச மூன்றுட னாளுந்
தமிழ்க்கெழு கூடற் றண்கோல் வேந்து’

என்னும் இவ்வடிகளில் வேற்றுமையுருபுகளும் பிறவும் தொக்குவருதல் காண்க. பிற்காலப் பகுதிகளிற் புலவர்கள் பல சொற்றொடர்களாக விரித்துரைத்த பொருளையெல்லாம் அக்காலப் புலவர்கள் தொகைகளை அமைத்தும், அடைகள் புணர்த்தியும், பெயர்ச் சொற்களுக்கு விகுதி கூட்டி வினையாக்கியும், இன்னோரன்ன பல முறைகளாற் சுரங்கிய மொழியில் விரிந்த பொருளை அமைத்துச் செய்யுட் செய்தனர். சொற்சுருக்கமும் கொருட்செறிவுமுடைய சொற்றொடர்களும், வினைத்தொகை முதலிய தொகைகளும் பிறவும்; சங்ககால வழக்கில் மிகுதியாகப் பயின்று வந்தமையாலே, சங்கத்தமிழ் சுரங்கிய சொல்லால் விரிந்த பொருளை விளக்கும் திறமுடையதாகி விளங்கிற்று, அக்காலச் செய்யுட்கள் பிற்காலப் பகுதிகளில் எழுந்த செய்யுட்களிலும் சிறந்தனஎவாகக் காணப்படுவதற்கு அக்கால மொழி நிலையினையும் ஒரு காரணமாகக் கூறலாம்.

சங்கமருவிய காலப்பகுதியில் கலிததொகை, பரிபாடல் ஆகிய இரு நூல்களுட் கோர்க்கப்பட்டுள்ள செய்யுட்கள்பலவற்றின் மொழி நடை முதலியவற்றை நோக்குமிடத்து, அவை சங்கமருவிய காலப்பகுதியில் எழுந்தவை என்றே கருத வேண்டியிருக்கின்றது. வடநூற் கருத்துக்கள், ஆரியர்போற்றி அறநெறிகள் முதலியவற்றைத் தமிழ் மக்கள் பெரிதும் போற்றி தழுவிய காலம் சங்கமருவிய காலம் என்பதை நாம் மேலே குறித்துள்ளோம். வுடமொழிச் சொற்கள், சொற்றொடர்கள், வடமொழி நூல்களிற் காணப்படும் கதைக்குறிப்புக்கள், அறநெறிகள் முதலியன கலித்தொகை செய்யுட்களிலோ நற்றிணைச் செய்யுட்களிலோ காணப்படும் அளவிற்குப் புறநானூற்றுச் செய்யுட்களிலோ நற்றிணை செய்யுட்களிலோ காண்பது அரிது. கைக்கிளை, பெருந்திணை ஆகிய ஒழுக்கங்களைக் கூறும் செய்யுட்கள் கலித்தொகையில் மட்டுந்தான் வந்துள்ளன. நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகிய அதihகை நூல்களுள் அன்பினைந்திணைச் செய்யுட்களே கோக்கப்பட்டுள்ளன. கலித்தொகைச்

செய்யுட்ளிலுள்ள உருவகங்களைச் சங்கச் செய்யுட்களிற் காண்பதரிது. மொழி நடையிற் கலித்தொகை பரிபாடலை ஒத்திருத்தலைக் காணலாம். இவற்றையெல்லாம் நோக்கும் போது அந்நூலிலுள்ள செய்யுட்களுட் பெரும்பாலானவை சங்கமருவிய காலத்துக்கு உரிவையென்றே துணிய வேண்டிருக்கின்றது. கலித்தொகையிலே சங்ககாலத்திற்குரிய செய்யுட்களும் கோக்கப்பட்டுள்ளன என்பதை அவற்றின் மொழிநடை, யாப்பு, பொருள்மரபு முதலியவற்றைக் கொண்டு அறியலாம்.

துணை நூற் பட்டியல்

1) தமிழ் இலக்கிய வரலாறு, பேராசிரியர் வி. செல்வநாயகம்

2) தமிழிசை ஆய்வு மாலை, முனைவர் இரா. வெசதீசன்

3) தமிழிசை தீபம், மேலைப்பூலியூர்' சச்சிதானந்தம்